# Chapter - 16 - Speech for 10th December 2022 – 1

## The Triple Status of Supermind

இதற்கு முன் மூன்று அத்தியாயங்களாக அதிமனம் - Supermind -ஐ பற்றி விளக்கிய பகவான் இந்த அத்தியாயத்தில் அதிமனதின் மூன்று நிலைகளை பற்றி விளக்குகிறார். அதற்கு முன் அத்தியாயங்களில் சொன்னவற்றை இங்கு மீண்டும் சுருக்கமாக நினைவுபடுத்தும் பகவான், இதன் மூலம் எவ்வளவு புரிந்துக் கொண்டு இருக்கிறோம், எந்த realisation க்கு வந்து இருக்கிறோம், இனி பெற வேண்டியது என்ன என்பது பற்றிய தெளிவு அதன் மூலம் வர வேண்டும் என்கிறார் பகவான். அப்படி என்றால் இந்த 15 அத்தியாயத்தில் கடந்து வந்தவை பற்றிய தெளிவு நமக்கு இருக்க வேண்டும். இனி வரப்போவதை அதன் மேல் கட்டமைக்க வேண்டும்.

உதாரணமாக என் company உருவான விதம் பற்றிய ஒரு தெளிவு எனக்கு இருக்கிறது. அது என் படைப்பு. அது உருவான விதத்தை பிரம்மத்தோடு, அது படைத்த பிரபஞ்சத்தோடு, ஒப்பிட்டு புரிந்துக் கொள்கிறேன். அது சரியா தவறா என்று தெரியாது. ஆனால் ஒரு அடிப்படையை ஏற்படுத்தி ஒரு அதன் மேல் என் realisation -ஐ கட்டமைக்கிறேன். அல்லது என் வாழ்வில் நடந்த பல சம்பவங்களில் அதை பொருத்தி பார்த்து புரிந்துக் கொள்ள நினைக்கிறேன். அது போன்ற ஒரு புரிதலுக்கு பழக்கப்படுவது Life Divine -ஐ புரிந்துக் கொள்ள உதவும் என்று நினைக்கிறேன். காரணம் நம் ஆனந்தம் நம் சுபாவத்திலும், சித்தத்திலும், nature and consciousness ஸிலும் இருக்கிறது என்னும்போது நம்மை பற்றி- நம் அகந்தை, ஆன்மா ஆகியவைப் பற்றி - ஒரு ஞானம், ஒரு தெளிவு இருந்தால் தவிர - அது பற்றிய உறுதி - will, திடசித்தம் - determination நமக்கு வராது. தெய்வீக வாழ்விற்கான ஆர்வமுடையவராக நாம் ஆக முடியாது. இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுவது போல திரையிட்டு மறைக்கப்பட்டு இருக்கும் நம் ஆன்மா என்னும் அம்சத்தை வெளிக் கொண்டு வர அல்லது அதை நோக்கிய நம் பார்வையை வளர்க்க முடியாது.

இதை கூறுவதற்கு முன் பகவான் இது வரை கடந்து வந்த அத்தியாயங்களை, குறிப்பாக கடந்த மூன்று அத்தியாயங்களை விளக்குகிறார். அது போல நான் கடந்த மூன்று நான்கு அத்தியாயங்களை, அவற்றில் இருந்து நான் புரிந்துக் கொண்டவற்றை மீண்டும் சுருக்கமாகத் தருகிறேன். அதிமனம் - supermind எப்படி பலவாக மாறுகிறது, அப்படி பலவாக மாறிய பிறகு தன்னை எப்படி பார்க்கிறது, தனக்கும் தன் படைப்புகளுக்கும் உள்ள தொடர்பை எப்படி பார்க்கிறது என்பதை பார்த்தோம்.

தன் படைப்பின் மூலம் அது பெற விரும்பும் ஞானம், பெற்ற ஞானம், பெற்றவன் மூன்றும் ஒன்றே - அதுவே அதன் Real idea என்று பார்த்தோம் - அதை நடைமுறையில் பார்க்கும் போது நம் பரிணாமத்திற்கான, முன்னேற்றத்திற்கான அல்லது ஆனந்தத்திற்கான, நாம் நினைக்கும் ஒரு idea வை மாயை என்னும் அளவில் எடுத்துக் கொள்கிறேன். அதாவது நம் idea நம்மை வழிநடத்துவது போல பிரம்மத்தின் self-guiding-idea - மாயை. அதன் நோக்கம், அதன் வழி, அதன் சட்டம் ஆகியவற்றை பற்றிய சித்தம் அதற்கு முழுமையாக இருக்கும் போது, அது தொகுத்தறியும் சித்தமாக இருக்கிறது.

அதை பிரபஞ்சத்தில், படைப்பில் வெளிப்படுத்த வேண்டிய விதத்தை பகுத்தறியும் சித்தமாக பிரிக்கிறது. இதற்கு உதாரணமாக என் company உருவான விதத்தை எடுத்துக் கொண்டேன். எனக்கு தெரிந்த பல விஷயங்களில் chemical - சம்பந்தப்பட்ட business செய்யலாம் என்று நினைத்தது - மாயை. அதை ஒட்டிய , அதை அடைய வேண்டிய முறைகள், சட்டங்கள், technology , systems பெற வேண்டிய பலன் ஆகியவற்றைப் பற்றிய தெளிவு - தொகுத்தறியும் சித்தம். அதை நிஜமாக்க இந்த சமுதாயத்தில், பிரபஞ்சத்தில் நான் வெளிப்படுத்தும் மனிதர்கள், கட்டிடம், இயந்திரங்கள், ஆகியவற்றை - பகுத்தறியும் சித்தம் என்று எடுத்துக் கொள்கிறேன்.

இந்த எல்லா நிலைகளும் எங்கோ இருப்பதல்ல. என் மனமே, என் மனதின் பல நிலைகளே. ஆனால் அத்தனை நிலைகளும் ஆனத்திற்கான என் idea வை ஒட்டி இல்லையென்றால் மனிதர்கள், இயந்திரங்கள், பதவிகள், systems ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல், அல்லது அவற்றுக்குள் இருக்கும், அல்லது இருக்க வேண்டிய தொடர்பை மறந்து செயல்பட்டால், அங்கு குழப்பமே மிஞ்சும். முரண்பாடாக மாறும்.

இதை பார்க்கும் நான், அதாவது என் real idea , தறிகெட்டு ஓடும் இவற்றை, என் idea வை நோக்கித் திருப்ப, அவற்றின் கவனத்தை திருப்ப, ஒரு தடை ஏற்படுத்துகிறேன். பிறகு அனைத்தும் என்னை நோக்கி, என் நோக்கத்தை ஒட்டி திரும்புகிறது. இதை தான் all problems of life are problems of harmony என்கிறார். இதன் விளக்கமாக தறி கேட்டு ஓடும் மனிதனை தன்னை நோக்கித் திருப்ப ஆன்மா எடுக்கும் வழி முரண்பாடு என்கிறார்.

அது பற்றிய ஞானம் முழுமையாக இருந்து, அதன் படியே அனைத்தும் செய்தால், அதாவது எப்போதும் நாம் அறிந்த உயர்ந்த ஞானத்தில், உயர்ந்த பண்பில் நின்று ஒன்றைச் செய்தால், அது வித்யா ஆகிறது. ஞானம் ஆகிறது. நமக்கு உயர் சித்தங்கள், பண்புகள், என்று பல தெரிந்து இருந்தாலும், நல்லது,

கெட்டது , சரி, தவறு என்று பல தெரிந்து இருந்தாலும், அது பற்றிய தெளிவு இருந்தாலும், பல காரணங்களால் அதை நாம் செய்யாமல் இருந்தால், அதுவே அஞ்ஞானமாகிறது.  அறியாமை ஆகிறது. மாயை, தொகுத்தறியும் சித்தம், பகுத்தறியும் சித்தம், வித்யா, அவித்யா என்று பகவான் கூறுபவற்றை நடைமுறை விளக்கமாக வாழ்வில் செயல்படுத்த நான் ஏற்றுக் கொண்ட புரிதல் இது. (நாம் பிறருக்கு சொல்லும் advise - 2 minutes)

இந்த அடிப்படையில், அதிமனதின் மூன்று நிலைகளை பார்க்கும் போது - பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்று மூன்று நிலைகளில், அல்லது மூன்று பரிமாணங்களில் அது வெளிப்படுவதாகக் கொள்ளலாம். இதை, தான் யாரென்று முழுதும் உணர்ந்த நிலை, தான் யார் என்று மறக்க முடியாத நிலை, உணர்ந்து பிரிந்த பிறகும் தன் மூலத்தை ஞாபகம் வைத்துள்ள நிலை என்று புரிதலுக்காக எடுத்துக் கொள்ளலாம்.

இங்கு பரமாத்மா என்பதை நாம் இது வரை சொன்ன பிரம்மம் என்றும், ஜீவாத்மா என்பதை அதன் படைப்புகள் என்றும், இந்த பிரிவினை வெளிப்படும் தளமாக அகந்தை என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இதை கர்மயோகி divine unity , divine multiplicity, individuality  என்று பிரிக்கிறார். இதில் individuality என்பதை தனித்தன்மை என்ற பொருளில் பார்த்தாலும் சரி, அகந்தையில்  இருந்து வெளியே வரும் இருப்பு என்று பார்த்தாலும் சரி, நம்மால் இன்னும் அதிகமாக இதை நடைமுறை சாத்தியமாக பார்க்க முடியும். நம்முள் தெய்வீக வாழ்வுக்கான ஆர்வம் முறையாக இருந்தால், நம்முள் மறைந்து இருக்கும், நாமாகவே மாறி இருக்கும் அந்த இறை அம்சத்தை வெளிக்கொணர முடியும்.

தற்போது இருக்கும் இறைவனை மறந்த நிலையில் இருந்து, பொய்யான நிலையில் இருந்து, அகந்தை நிலையில் இருந்து, உயர்ந்த நம்முடைய உண்மையான  இருப்பை எட்ட வேண்டும். Truth consciousness - சத்திய சித்தத்துடன் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். ஒருமையை பார்க்கும் இந்த சத்தியசித்தத்திலும், பிரிவினை பார்க்கும் இந்த அகந்தையிலும் நம்மால் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. அதில் ஏதோ ஒன்றை துறந்தாக வேண்டும். அப்போது தான் ஏதாவது ஒன்றில் முழுதுமாக ஈடுபடமுடியும் என்னும் போது, ஒன்று இந்த உலக வாழ்வை விட்டு விலக வேண்டும் அல்லது இறையுணர்வை விட்டு விலக வேண்டும் என்று தோன்றுகிறது. இவை எல்லாமே இறைவனின் மாயையின் real idea வின் விளைவாக மேல் மனதில் தோன்றும் கற்பனைத் தோற்றமே என்கிறார் பகவான்.

வாழ்வில் மனதை, உடலை, உணர்வை, அதன் சுகங்களை விட்டால் தான் நமக்கு ஆனந்தம் கிடைக்கும் என்றால், தெய்வீக வாழ்வு கிடைக்கும் என்றால், இந்த பிறவியில், இந்த வாழ்வில் ஆனந்தம் கிடைக்காது என்றே பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி என்றால் நாம் ஏன் வீணாக இறைவனை நினைத்து, நம் மேல் மனதின் ஆனந்தங்களை துறக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது. இல்லையென்றால் இந்த இரண்டையும் இணைக்கக் கூடிய கருவி ஒன்று இருக்க வேண்டும், இரண்டு நிலைகளையும் நமக்குத் தெளிவாக உணர்த்தி - நம் இருப்பையும், பிரம்மத்தையும், இரண்டுக்குமுமான ஒருமையையும், அப்படி இருந்தால் வரும் ஆனந்தத்தையும் - அதை மனம், உடல், உணர்வு ஆகியவற்றில் பெற்று உணர்வதற்கும் ஒரு கருவி இருக்க வேண்டும். பிரம்மத்திடம் மனிதனை கொண்டு சேர்ப்பதற்கும், மனிதனிடம் பிரம்மத்தை சேர்ப்பதற்கும் ஒரு கருவி இருக்க வேண்டும். அதன் மூலம் மனம், உணர்வு, உடல் பெரும் துன்பம் ஆனந்தம் மயமாக்கப்பட வேண்டும். இதை bliss of real idea of brahman என்கிறார். உள்ளுறை ஞானத்தை பூர்த்தி செய்யும் நிலை ஆனந்த நிலை என்கிறார். அப்படி ஒன்று இருக்கிறதா என்றால் இருக்கிறது என்பதே பதில். அது சத்திய சித்தம் - அது மனதை கடந்த, அகந்தையை கடந்த உயர்ந்த தத்துவம். மனம் தோற்று - துன்பப்படும் இடங்களில் மனமாற்றத்தால் அதற்கு ஆனந்தம் தரும் தத்துவம். அந்த சத்திய சித்தமே நமக்கு அன்னை. அவரின் பண்புகளே நமக்கு ஆனந்தம் .

சிறு உதாரணமாக சொல்வதென்றால் குடும்பஸ்தனுக்கு வாழ்வில் கோபம் என்பது சாதாரணமானது . ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் அதனால் வரும் பிரச்சினைகள் அதிகம். தெய்வீக வாழ்வை தேடும் யோகிகளுக்கு கோபம் கூடாது. அதனால் வாழ்வை விட்டு விலகி இறைவனை அடைய தவம் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆனால் அவனே குடும்பத்தில் சத்திய சித்தத்தின் தத்துவம் மேல் நினைவு இருந்து, அதன் பண்புகள் மேல் நம்பிக்கை இருந்து, குடும்பத்தில், வாழ்வில் கோபம் இல்லாத நிலையில் இருந்தால், அவன் வாழ்வும் அவனுடன் தொடர்புடையோர் வாழ்வும் ஆனந்தமாக இருக்கும். இதை புரியவைக்கும் தத்துவமாக, சத்திய சித்தமாக, ஆற்றலாக இருப்பவர் அன்னை. அகந்தையை அடிப்படையாகக் கொண்டு வாழ்வை நடத்தும் நாம்- நம் அகந்தையின் ஒரு வெளிப்பாட்டை அன்னையின் பண்புகளை நோக்கி திருப்பும் போது சராசரி வாழ்வு வாழும் மனிதர்களிடமிருந்து வித்தியாசப்பட்டு ஒரு தனித்துவம் பெறுகிறோம். அதுவே கர்மயோகி இங்கு கூறும் Individuality - நம் அகந்தை ஆன்மாவை நோக்கி, அன்னையை நோக்கி திரும்பி இருக்கும் ஒரு நிலை. அகந்தை தன்

இருப்பை முழுதுமாக மறப்பதற்கு, சிருஷ்டியில் மேலும் இறங்குவதற்கு முன் நிலை. அந்த நிலையில் தான் நம் ஆனந்தம் ஆரம்பிக்கிறது. அது அதிமனதின் மூன்று பரிமாணங்கள். முக்கியமான பரிமாணம்.

என் வாழ்வில் நடந்த ஒரு உதாரணத்தை எடுத்துக் கொண்டு இதை புரிந்துக் கொள்கிறேன். (Cheque - Texsa example - 6 minutes)

முதல் நிகழ்வு, அகந்தை, தான் அறிந்த உயர்ந்த ஞானத்தை பயன்படுத்தாமல், தான் சரி என்று நினைத்த நிலை- மேல் மனதின் ஆனந்தத்திற்கு செய்த செயல் அது. அவித்யா என்னும் நிலை. இரண்டாவது நிகழ்வு, தான் அறிந்த உயர்ந்த பண்பை அகந்தை அடிபடும் என்று தெரிந்தே செய்தது. இரண்டாவதில் இன்னும் அதிக ஞானமும், வளர்ச்சியும், பரிணாமமும் வந்தது. அதாவது நாம் நம் அகந்தையை, ஆன்மாவை, அன்னையை நோக்கித் திருப்பும் போது self-knowledge , Truth Consciousness , real idea என்ற அனைத்தும் ஒன்றிணைந்து சக்தியாக, ஆற்றலாக வெளிப்படுகிறது. அதுவே அதிமனம், அதுவே சத்திய சித்தம். அதுவே அன்னை. அதற்கான ஞானம், உறுதி ஆகியவற்றைக் கொண்டு அன்னையின் பண்புகளுக்காக என்று செய்யும் போது அன்னையுடன், அதிமனதுடன் ஒன்றுபடுகிறோம்.

ஞானமும், உறுதியும் பிரித்தறியும் மனதின் முந்தைய நிலை என்பதால் - அதிமனம் - மனதின் பிரிவினைக்குள் செல்லாமல் நாம் பரிணாமத்தில் வளரும் அளவிற்கு வடிவமைக்கப்படுகிறது . அது வாழ்வில் வளமாக, முன்னேற்றமாக அடுத்த கட்டத்திற்கு நகரும் நிகழ்வாக அமைந்து விடுகிறது. அத்தகைய முன்னேற்றம் நமக்கு ஒரு தனித்துவத்தை தந்து விடுகிறது. அதை தருவது அதிமனதின் அந்த individuality என்னும் நிலை. அதுவே மனிதனின் வளர்ச்சியை கண்காணிக்கிறது. நிர்வகித்து வருகிறது. அதன் அடையாளம் தன்னை உணர்ந்த அகந்தை. இறைவனை நோக்கிய நினைவு. தன் இருப்பை பற்றிய ஞானம் இருக்கும் அகந்தை. எந்த சூழலில் இருந்தாலும் இறைவனுக்கான பூரண சுமுகத்துடன் செயல்படும் நிலை. All corresponding, all possessing , all constituting என்னும் நிலை. மேல் மனதில் உணர்வு என்ன சொல்கிறதோ அதைத் தான் மனம் வெளிப்படுத்தும். உணர்வுக்கு கோபம் என்றால் கோபம் வெளிப்படும். சந்தோஷம் என்றால் சந்தோஷம் வெளிப்படும். அது போல, நம் உணர்வுகள், அன்னை விரும்பும் பண்புகளை வெளிப்படுத்த சித்தமாக இருந்தால், அதுவே அதிமன நிலை. அது அவரவருக்கான தனித்தன்மையோடு வெளிப்படும் என்பதால், அதற்கான

வித்து, பரிணாமத்திற்கான வித்து அதிலேயே இருக்கும் என்பதால் நமக்கான ஆனந்தம் அங்கே வெளிப்படும். (primbuds example but tell as factory -3 mintues). இங்கு அன்னை விரும்பும் பண்பான ஒருமை என்பதை ஓரளவாவது தொட்டதால் நிகழ்ந்த மற்றம். அது தொழிலில் முன்னேற்றமாக அவர் விரும்பிய அனந்தமாக மாறியது.

அதிமனதின் முதல் நிலை பிரிக்க முடியாத ஒருமை. இரண்டாவது நிலை ஒன்றில் இருந்து பலவற்றை வெளிப்பட செய்து பலவற்றில் இருக்கும் ஒன்றை உணர தேவையான மாற்றத்தை ஏற்படுத்திய மனம். பிரிவினைக்குள் ஒருமையை உணரும் நிலை. இதற்கான செயல்படும், தனித்தனி உருவங்களை, தனித்தனி அம்சங்களுடன் உருவாக்குகிறது. தன்னை தனிமைப்படுத்தி அதை மட்டுமே அறியக்கூடிய அளவிற்கு ஒரு அறியாமையை ஏற்படுத்தி அந்த அறியாமையில் இருந்து பின்னர் மீண்டும் சித்தத்தில் உயர்ந்து, ஞானம் பெற்று பரிணாமத்தில் உயர வடிவங்களை ஏற்படுத்துவது மூன்றாம் நிலை.

சத்புருஷன் தான் ஆனந்தத்தை அனுபவிக்க ஒரு பிரபஞ்சத்தை சிருஷ்டிக்க எண்ணுகிறான். அதன் உள்ளுறையும் அம்சமாக சித் சக்தி விளங்குகிறது. அப்போதும் அது சத்சித்தானந்தத்தின் பரிபூரண அம்சமாகவே இருக்கிறது. அந்நிலையில் அது பலவாக பிரியவில்லை. பிரபஞ்சத்தை தோற்றுவிக்கவில்லை. காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் தான் இருக்கிறது. அந்த நிலை அதிமனம். இதுவும் ஒருமை. ஐக்கியம் கொண்ட ஒரு நிலை தான். இங்கும் பலவாக பிரியும், எண்ணம் இருக்கிறதே தவிர இன்னும் பிரியவில்லை. சிருஷ்டி தொடங்கப்படவில்லை. அந்த எண்ணம் அதற்கு இருப்பதால் அந்த சித்தம் consciousness இருப்பதால் அது சத்திய சித்தமாகிறது. அந்த சித்தத்தை நோக்கி நம் ஆன்மா திரும்பும் போது நாம் இறைவனோடு கலக்கிறோம். காரணம் இந்த எல்லைக்குள் தனிப்பட்ட உணர்வு செயல்பாடு கிடையாது. இந்த நிலையை தொகுத்தறியும் சித்தம் என்கிறோம். அடுத்தது பிரம்மத்தின் ஒருமை, பிரம்மத்தின் பன்முகத் தன்மையாக மாறுகிறது. பல வடிவங்கள் உருவங்களாகத் தோன்றுகிறது. Divine unity becoming divine multiplicity. ஒவ்வொன்றிலும் தன் இருப்பை வைக்கிறது. தன்னுடைய சக்தி, ஆற்றல் எல்லாவற்றிலும் பரவ தேவையானதை செய்கிறது. அதை பகுத்தறியும் சித்தம் என்கிறோம்.

இதை இன்னும் எளிமையாக பார்க்க வேண்டும் என்றால் - நாம் உணர்வு நிலையில் நாமே பிரம்மம், நாமே அன்னை என்று உணர்ந்து அந்த அன்னையின், ஒருமையின், முழுமையின் அம்சமே நாம் என்று உணரும்

போது நாம் அடையும் நிலை ஒரு நிலை. இரண்டாவது நிலையில் நம்மை புரிந்து நம்மை தனி ஜீவனாக உணர்ந்தாலும் இறைவனுடனான நம் ஆன்மாவின் தொடர்பை உணர்ந்து அதை அனுபவிக்கும், நம் முழுமையை உணரும் ஒரு நிலை. இந்த இரண்டு நிலைகளிலும் இறைவனின் விருப்பம் தவிர வேறு எதுவும் இந்த பிரபஞ்சத்தில் இல்லை என்று உணரும் சமர்ப்பணம், சரணாகதி போன்றவற்றை தரும் நிலை. ஆனால் இந்த நிலையிலும் ஞானம் பெறும் பரிணாமம் என்னும் வளர்ச்சி குறைவாகவே இருப்பதால் ஒன்று பலவாக பிரிந்த பிறகு, விரிவடைந்த பிறகு தன்னை பிரித்துணர்ந்து இறைவனுடன் ஒன்ற, ஒரு ஏற்பாட்டை அதிமனம் செய்கிறது. அது தனித்துவம், காரணம் இது லீலை நடைபெறுவதற்கு தேவைப்படுகிறது. இந்த நிலையில் அதிமனம் விலகியிருப்பது போல தோன்றினாலும் அது ஒரு செயலில் ஈடுபடுகிறது. அல்லது ஒவ்வொரு செயலிலும் தன்னை வெளிப்படுத்த நினைக்கிறது. அதனால் ஒவ்வொரு வடிவத்திற்கும் ஒரு தனிச்சிறப்பு அளிக்கப்படுகிறது. அதைத் தான் தனித்துவம் என்கிறோம். தனி குணம், தனி அம்சம், தனி சுபாவம், தனி உருவ அமைப்பு, தனித் தனியான விருப்பு, வெறுப்பு, ஆசைகள், நடத்தை, ஞானம், அஞ்ஞானம் என்று அது பலவாக மாறி வெளிப்படுகிறது. இந்த வெளிப்பாட்டை அகந்தை என்கிறோம். ஆனால் நாம் அந்த தனித்தன்மையை மட்டும் பார்த்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தவுடன் அதனுடன் ஒன்றி விடுகிறோம். அதன் மூலம் அது எங்கிருந்து வந்தது, எதற்கு வந்தது என்பதை மறந்து விடுகிறோம். அதை சுகமாக நினைக்க ஆரம்பித்தவுடன் அதை நம்மால் விட முடிவதில்லை. அனைத்தும் அதிமனதின் அங்கமே, அதன் செயலே என்று ஏற்க முடியாத அளவிற்கு என்னால் எதையும் செய்ய முடியும். எதுவும் என் கையில் தான் உள்ளது. பிரார்த்தனை என்றாலும் அது என் விருப்பப்படியே இருக்க வேண்டும், என் விருப்படியே நடக்க வேண்டும் என்னும் அளவிற்கு, அதாவது அன்னையே ஆனாலும் அவர் நான் சொல்வதைக் கேட்க வேண்டும் என்னும் அளவிற்கு நம் தன்மை கொண்டு சென்று விடுகிறது. இந்த மாற்றமே அவித்யா என்னும் நிலை. அதாவது தான் சுயமாக இயங்குவதாக நினைக்கும் நிலை. தன்னுடைய அறிவு, தன்னுடைய திறமை, ஆகியவற்றை கொண்டு வாழ்வதாக எண்ணும் நிலை. அப்படி எண்ணும் போது தான் நமக்கான உலகம் உருவாகிறது. இறைவனின் லீலை நடைபெறும் இடமாக மாறுகிறது. இங்கு லீலை என்பது பரிணாம வளர்ச்சி. இந்த ஞானம் பெற்று நாம் அறியாமையில் இருந்து வெளியே வருவது வித்யா. அதாவது சித்தத்தில் நாம் அடுத்த நிலைக்கு உயர்வது. அந்த நிலையில் நாம் ஆன்மா என்று ஒன்று இருப்பதை உணர்கிறோம். அவனை நோக்கி திரும்புகிறோம். அது அதிமனதின் மூன்றாம் நிலை.

முன்பு சொன்ன உதாரணங்கள் மூலம் -அல்லது அதை வாழ்வில் பொருத்திப் பார்க்கும் போது மாயை என்பது பிரம்மத்தின் சுபாவம். அதிமனம் என்பது சத்சித்தானந்தத்தின் சுபாவம். பிரபஞ்சம் என்பது அதிமனதின் சுபாவம் என்று புரிந்துக் கொள்ளலாம். இதை நடைமுறையில் புரிந்துக் கொண்டால் individuality என்னும் நிலையை, அகந்தை ஆன்மாவை நோக்கி இருக்கும் நிலையை , நம்மால் புரிந்துக் கொள்ள முடியும். ஒரே உண்மையை, ஒரே சத்திய சித்தத்தை பல வழிகளில் அடைய முயற்சிக்கிறோம் என்பது புரியும்.

பிரம்மம், பலவாக மாறி எல்லாவற்றிலும் தான் இருப்பதை நினைவில் கொண்டு இருப்பது முதல் நிலை. பலவாக பிரிந்து அந்த பிரிவினையையும் நினைவில் கொண்டு, அந்த பிரிவினைக்குள் ஒருமையை காண்பது இரண்டாவது நிலை. அதற்காக பலவற்றை உருவாக்கி, செயலில், காலத்தில், வெளிப்படுத்தி அதன் விளைவுகளை அனுபவிப்பது மூன்றாவது நிலை.

உதாரணமாக என் company என் idea வில் உருவானது. நானே ஏதோ ஒரு காரணத்திற்காக, அல்லது சில சூழ்நிலைகளால் நானே, manager ஆக , supervisor ஆக, wachman ஆக , load man ஆக , சில விடுமுறை நாட்களில் இருக்க வேண்டி வரும். அப்போது அந்தந்த நிலைகளில் நான் செய்யும் செயல் என்னுடைய real idea வை ஒட்டியே இருக்க வேண்டும். அதை மறந்து manager ஆக, supervisor ஆக என் இஷ்டப்படி நடந்தால் குழப்பமே ஏற்படும். முரண்பாடே ஏற்படும். அதன் பிறகு மீண்டும் என்னுடைய நோக்கத்திற்கு வந்த பிறகே சரி ஆகும். வாழ்வில் முரண்பாடு, துன்பம் வரும் போது நடப்பது அதுவே.

உதாரணமாக special economic zone களில் எங்கள் material செல்லும் போது ஏராளமான checking கள் உண்டு. check post களில் தர வேண்டியதை தராமல் சரக்கு செல்ல முடியாது. ஆனால் ஆரம்பம் முதலே கர்மயோகியின் ஆணைப்படி லஞ்சம் கொடுக்காமல் தொழில் செய்து வருவதால் ஆரம்பத்தில் சில பிரச்சினைகள் வந்தாலும், பின் இவர் பேப்பர்கள், documents கள் எல்லாம் சரியாக இருக்கும், விட்டு விடு என்னும் நிலைக்கு இந்த பத்து ஆண்டுகளில் வந்து விட்டது. அதனால் எங்கள் வண்டியை நிறுத்த மாற்றங்கள், செக் செய்ய மாட்டார்கள். ஆனால் தற்போது வந்த புது manager என் கொள்கை தெரியாமல், நேரம் விரயமாவதை தடுக்க லஞ்சம் கொடுக்க முன்வந்த போது, check post இல் சந்தேகம் வந்து வண்டியை ஓரம் கட்டி நிற்க வைத்து, check செய்தார்கள். செக் செய்யட்டும். பைன் வேண்டுமானாலும் காட்டுங்கள் ஆனால் லஞ்சம் தர முடியாது என்று கூறி விட்டேன். அதாவது என் idea மேல் கட்டமைக்கப்பட்ட ஒரு பண்பு மாறும் போது, அது ஒரு

முரண்பாட்டை, துன்பத்தை, பிரச்சினையை கொண்டு வருகிறது. அதன் பின் நான் உயர் அதிகாரிகளிடம் பேசிய பிறகு, இந்த company என்று சொல்லியிருக்கக் கூடாதா, எங்களுக்கு தெரியும், அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்பதால், அனுப்பி விடச் சொன்னார்கள். அதாவது என் கொள்கைக்குள் வந்த பிறகு பிரச்சினை தீர்ந்தது .

மனநிலையில், சித்தத்தில் உயர வேண்டும் என்பது நம் பரிணாமத்தின் கட்டாயம் - சட்டம். அதை மீறியதாக நாம் நினைக்குமிடங்கள், அதனால் வந்த வெற்றிகள் என்று நாம் நினைக்கும் இடங்களை ஆராய்ந்தால் - சில காலம் கழித்து, அவற்றின் நிலை, அதை ஒட்டிய நம் நிலையை ஆராய்ந்தால், இந்த உண்மை புரியும். நம் அகந்தை அதன் பரிமாணங்களான அபிப்ராயங்கள், எதிர்பார்புகள், சுக தேவைகள் ஆகியவற்றை மீறி படிப்பு, முன்னேற்றம், வளம் என்று ஒரு உயர் நோக்கத்தை கொள்கையை ஒட்டி செய்தவைகளே நிரந்தர வெற்றியாக இருந்திருக்கிறது. அந்தந்த நிலைக்கான ஆன்மாவின் பண்புகளை நாம் எடுக்கவில்லை என்றால், அடுத்த உயர்ந்த நிலையை அகந்தை பார்க்கவில்லை என்றால், நமக்கு அது வாழ்வில் துன்பமாகத் தான் வெளிப்படுகிறது.

முன்பு சொன்ன உதாரணம் போல, நாம் பிறருக்கு தரும் அறிவுரைகளைக் கூட, நமக்கு தெரிந்த உயர்ந்ததைக் கூட நாம் நம் அகந்தையின் விருப்பத்தின் காரணமாக அதன் எதிர்பார்பின் காரணமாக நாம் செய்வதில்லை. ஆன்மாவை நோக்கி அதன் பார்வையை நாம் திருப்புவதே இல்லை. இதற்கு உதாரணமாக சமீபத்தில் படித்த ஒரு நிகழ்வை கூறுகிறேன். [Rajat Gupta example – 3 minutes)

எந்த உயரத்தில் நாம் தவறுகிறோமோ அதற்கான அடியும் பலமாக இருக்கும். இதுவே பரிணாமத்தின் சட்டம் - அதனால் நம் அகந்தை எப்போதும் ஆன்மாவை நோக்கி இருப்பதை பரிணாமதிற்கு, இறைவனின் ஆனந்தத்திற்கு தேவை.

இதை நடைமுறையில் நம் மனப்பான்மை, மனப்போக்கு, அபிப்ராயங்கள் ஆகிய அஞ்ஞானங்களிலிருந்து வெளியே வருவது நாம் அகந்தையில் இருந்து வெளியே வருவது - மூன்றாம் நிலைக்கு உதாரணம். அப்படி வெளியே வந்து அந்த realisation உடன் இறைவனின் திருவுள்ளத்தை இந்த உலகில் நிறைவேற்றுவது இரண்டாவது நிலை. நாமே இறைவன் என்று உணர்வது முதல் நிலை என்று மனதின் நிலைகளை நாம் புரிந்துக் கொண்டால், அதிமனதின் மூன்று நிலைகளை நாம் புரிந்துக் கொள்ள முடியும். அது

அறிவால் புரிந்துக் கொள்ள கூடியதில்லை என்று கர்மயோகி கூறினாலும் - எங்காவது ஒரு ஆரம்பம் வேண்டும் என்பதால் நான் அப்படி புரிந்துக் கொள்கிறேன். அப்படிப் புரியும் போது நான் ஒரே சத்தியத்தை மூன்று நிலைகளிலும் புரிந்துக் கொள்கிறேன். அங்கே முரண்பாடு, துன்பம் என்பது இல்லை. அனைத்தும் இறைவனின் ஆனந்தத்தை வெளிப்படுத்துபவை என்று புரிகிறது.

உதாரணமாக 2015-இல் வந்த வெள்ளம் எனக்கு extreme அதீத சோகத்தை, நஷ்டத்தை, துன்பத்தை தந்தது. ஆனால் அதன் பிறகு பண்புகளை இனி அதிகம் பின்பற்ற வேண்டும் என்னும் திட சித்தம் வந்தவுடன் - அது வேறு வகையில் ஒரு சாதனையாக வெளிப்பட்டபோது அது பற்றி எல்லாம் கர்மயோகிக்கு எழுதிய போது, என்னை பார்க்க விரும்பி அழைத்தார். அதன் பிறகு பெரும்பாலான அன்பர்களை பார்த்தார். 69 நாட்கள் அவருடன் வைத்துக் கொண்டார். அதன் மூலம் ஏராளமான திருவுருமாற்றம் என்னும் அளவிற்கு மனவளர்ச்சி, அறிவு வளர்ச்சி என்று நான் பேசுவது நன்றாக இருக்கிறது,புரிகிறது என்று கூறுமளவிற்கான வெளிப்படுத்த கூடிய ஆற்றல், ஏறத்தாழ 300 subscriber கள் , வெள்ளிக்கிழமை article வரவில்லை என்றால் ஏன் என்று கேள்வி எழுப்பும் அளவிற்கு உரிமை என்று பார்க்கும் போது, அதற்கு வித்திட்டது அந்த வெள்ளம் தான் என்னும் போது இறைவனின் முழுமை புரிகிறது. எல்லாம் ஆனந்தத்திற்கே என்று புரிகிறது. அதை முழுமையாக ஆராயும் போது , அதன் பின் உள்ள மாயை, லீலை, தொகுத்தறியும் சித்தம், பகுத்தறியும் சித்தம், அதன் தனித்தன்மையான என் அக்கதையின் மேல் தாக்குதல், பின் அதன் மூலம் என்னை, ஆன்மாவை நோக்கி திருப்புதல் என்று இந்த அத்தியாயத்தின் சாரம் முழுதும் அந்த ஒரு நிகழ்விலேயே பார்க்க முடிகிறது. இது போன்றவை எல்லோர் வாழ்விலும் இருக்கும். அதை அதிமனத்தின் பார்வையில் பார்த்து புரிந்து கொள்ள முயலவேண்டும்.

==========================================================